OS 57/2024
வா.சா.1 பிரபாகரன் த/பெ சின்னதம்பி
நாள் 29.10.2025

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. நான் அரையாளம் கிராமத்தில் வசிக்கிறேன். பிரதிவாதி கல்வாசல் கிராமத்தை சேர்ந்தவர். எனது ஊருக்கும் பிரதிவாதியின் ஊருக்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 20 கி.மீ தூரம் இருக்கும். பிரதிவாதி எவ்வாறு பழக்கம் என்றால் எனக்கு தெரிந்தவர் மூலம் பழக்கம். நம்பிக்கையான ஆள் திருப்பி கொடுத்து விடுவார் என்று சொன்னதன் பேரில் கொடுத்தேன். எனக்கும் பிரதிவாதிக்கும் இதற்கு முன்னர் கொடுக்கல் வாங்கல் இருந்ததா என்றால் இல்லை. பணம் கேட்ட உடன் கொடுத்துவிட்டேனா என்றால் பணம் கேட்டு 2 வாரம் கழித்து கொடுத்தேன். பணம் நான் வைத்திருந்தேனா என்றால் ஆமாம் நான் வீட்டில் வைத்திருந்தேன். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் பட்டு தொழில் செய்கிறேன். நான் 2 லட்சம் வைத்திருப்பேனா என்றால் அப்படி இல்லை கொஞ்சம் கொஞ்சம் சேர்த்து வைத்திருப்பேன். எப்போது பணம் கொடுத்தேன் என்றால் 08.11.2022ல் கொடுத்தேன். வெள்ளை பேப்பரில் எழுதி வாங்கினேனா என்றால் இல்லை பச்சை கலர் பாண்டு பேப்பரில் எழுதி வாங்கினேன்.

2. பாண்டை எழுதும் போது யார் யார் இருந்தார்கள் என்றால் ஸ்ரீதரன் என்பவர் பாண்டை எழுதினார் முனிதாஸ் என்பவர் சாட்சி கையொப்பம் செய்தார். பாண்டை எழுதி முடித்த பிறகு தான் அவர் கையொப்பம் செய்தார். விலாசம் யார் சொன்னது என்றால் எனது விலாசத்தை நான் சொன்னேன் அவரது விலாசத்தை பிரதிவாதி சொன்னார். சாட்சி எத்தனை பேர் என்றால் 1 நபர் தான் சாட்சி. ஆங்கிலத்தில் கையொப்பம் போடப்பட்டதா என்றால் ஸ்ரீதரனும் முனிதாசும் தமிழில் கையொப்பம் செய்தார்கள். பாண்டு பேப்பர் யார் வாங்கியது என்றால் பக்கத்தில் கடை இருந்தது அங்கு வாங்கினோம். எத்தனை முத்திரை தாள் ஒட்டப்பட்டிருந்தது என்றால் எனக்கு நியாபகம் இல்லை. பாண்டு எந்த நேரத்தில் எழுதப்பட்டது என்றால் மதியம் 12ல் இருந்து 1 மணி இருக்கும். பாண்டு எங்க வீட்டில் முன்பு உள்ள வராண்டாவில் எழுதப்பட்டது. யார் யார் எந்த எந்த பேனாவில் கையொப்பம் செய்தார்கள் என்றால் பாண்டு எழுதியவர் கொண்டு வந்த பேனாவில் தான் கையொப்பம் செய்தார். நான் எந்த பேனாவில் கையொப்பம் செய்தேன் என்றால் நான் கையொப்பம் செய்யவில்லை.

3. பாண்டில் அடித்தல் திருத்தல் இருக்கிறதா என்றால் நியாபகம் இல்லை. வட்டி எவ்வளவு என்றால் 1 பைசா வட்டி ஆகும். சாட்சி முனிதாசின் தகப்பனார் பெயர் சொல்லமுடியுமா என்றால் ராமசாமி ஆகும். பிரதிவாதி வேலு என்ன தொழில் செய்கிறார் என்றால் விவசாய தொழில் செய்கிறார். விவசாய வேலை செய்பவருக்கு எந்த அடிப்படையில் 2 லட்சம் கடன் கொடுத்தேன் என்றால் குடும்ப அவசர தேவைக்காக கேட்டார் 3 மாத காலத்தில் திருப்பி கொடுப்பதாக கூறியதால் கொடுத்தேன். பாண்டில் குடும்ப செலவிற்காக என்று எழுதப்பட்டுள்ளது. குடும்ப செலவு தவிர்த்து வேறு ஏதேனும் சொல்லியிருந்தால் பிரதிவாதி கையொப்பம் செய்ய வில்லை என்று எடுத்துக்கொள்ளலாமா என்றால் இல்லை அவர் தான் கையொப்பம் செய்தார். 14.12.2023ம் தேதி பணத்தை கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். கடன் தொகை எந்த ரூபாய் தாளாக கொடுத்தேன் என்றால் நான்கு 500 ரூபாய் கட்டுகளாக கொடுத்தேன்.

4. பிரதிவாதி ஒரு கையொப்பம் செய்திருக்கிறாரா என்றால் முத்திரை வில்லை மீது ஒரு கையொப்பமும் அதற்கு கீழே ஒரு கையொப்பமும் செய்திருக்கிறார். பிரதிவாதி என்னிடம் கடன் வாங்கவில்லை என்றாலும் பிரதிவாதியிடம் இருந்து பணம் பறிக்க வேண்டி தாக்கல் செய்துள்ள வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல. நான் பிரதிவாதியிடம் பணத்தை எப்போது திருப்பி கேட்டேன் என்றால் 60 நாள் கழித்து கேட்டேன். வீட்டில் அசல் பத்திரத்தை கொடுத்து விட்டு தான் பிரதிவாதி பணம் வாங்கி சென்றார். நீதிமன்றத்தில் அசல் ஆவணத்தை தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். என்ன பத்திரம் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் கிரையப்பத்திரம் தாக்கல் செய்திருக்கிறேன். யார் யாருக்கு எழுதி கொடுத்தார்கள் என்று நியாபகம் இல்லை. நான் மேலே சொன்ன அசல் பத்திரம் என்னிடம் வீட்டில் இருக்கிறது என்றால் சரிதான். அசல் பத்திரத்தில் உள்ள வேலு என்கிற கையொப்பத்தை பார்த்து தாவா பாண்டில் நானே போட்டு மோசடியான வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல.